மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே அங்கு ஒரு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். ஆக, ஒரு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 5 உப கோட்டங்கள் இருந்தால்தான் அமைக்க முடியும். ஆக, அந்தப் பகுதிகளுக்கு ஒரு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகமே போதுமானதாக இருக்கும் என்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபடி செய்ய வேண்டுமென்றால், உப கோட்டங்களை முதலில் பிரிக்க வேண்டும். அதற்குப் பின்னால்தான் கோட்ட செயற் பொறியாளர் அலுவலகத்தைப் பிரிக்க வேண்டும். வருங்காலத்தில் எந்த அளவுக்குத் தேவை இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

கிராம ஊராட்சியைத் தரம் உயர்த்துதல்

***223 — திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் கிராம ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள கலசப்பாக்கம் கிராம ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதிகை மலை பூங்காற்றாய், புரட்சித் தலைவர் கண்டெடுத்த பொக்கிஷமாய், திருவதிகை தேவாரமாய், வான் சிந்தும் அமிர்தமாய், கானகம் சிந்தும் சந்தனமாய், தமிழகம் காக்க வந்த தங்க மலராய்த் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கமல பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-20

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கம் ஊராட்சியை இரண்டாம் நிலை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் ஊராட்சியில் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி பெண்கள் 2,537 பேரும், ஆண்கள் 2,518 பேரும், ஆக மொத்தம் 5,055 பேர் வசிக்கின்றனர். இக்கிராம ஊராட்சியின் ஆண்டு வருமானம் ரூ.24,17,813/-ஆகும். இக்கிராம ஊராட்சியில் அனைத்துத் துறைகளைச் சார்ந்த தலைமை அலுவலகங்களும் இயங்கி வருவதால், இந்தக் கிராம ஊராட்சியை இரண்டாம் நிலை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் கிராம ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தக் கோரியதோடு, அங்குள்ள மக்கள்தொகை மற்றும் வருமானத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஊராட்சிகளைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் சில நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் கிராம ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து, அரசாணையில் தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுப்பப்படும் கருத்துருவின்மீது, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரால் அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்படுகையில், சட்டத்திற்குட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஆய்வு நடத்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், அங்கு இருக்கக்கூடிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகியோருடன் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்படுமானால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, வரும் காலங்களில் நிறைவேற்றித் தரப்படும் எனத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது சார்பிலும், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2016 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.

திரு. டி.எ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தினம் தினம் வணங்கும் அம்மா என்ற கடவுளை வணங்கி, தமிழ்நாட்டு மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து வாழும் அம்மா! தாங்கள் வாழும் காலத்தில் சாதாரண குடும்பத்தில் வாழ்கின்ற எங்களையெல்லாம் இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த தங்களை எங்கள் உயிருள்ளளவும் நாங்கள் மறக்க மாட்டோம்.

பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி நகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, தற்போது அதற்கான ஆய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 10, 11, 12, 13 ஆகிய வார்டுகளில் கழிவு நீர் வெளியேறி, வீடுகளுக்குள் புகுந்துவிடும் சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் கழிவு நீர் வெளியேறுவதற்காக, தற்சமயம் சிறிய கால்வாய் வெட்டி, கழிவு நீர் வெளியேறுவதற்கான வழிவகை செய்து தர ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொண்டு, நன்றி கூறி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியைக் கேட்டிருக்கின்றார். அதற்கு அவர் தனிக் கேள்வி போட்டிருக்க வேண்டும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த இடத்தில் அந்தப் பிரச்சினை இருப்பின், துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறவிருக்கக்கூடிய உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் 100 சதவீத வெற்றியை நோக்கி சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுவான கேள்விகளுக்கும் பதில் சொல்லக்கூடிய நிலையில் இருக்கும் சூழ்நிலையில், பொதுவான கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன். தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் நீண்ட நாள் பிரச்சினையாக இருக்கின்ற குமுளி பேருந்துப் பணிமனை இப்பொழுது Lower Camp-க்கு மாற்றப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் துறையின் சம்மதத்துடன் அந்தப் பணிமனை மாற்றப்பட்டிருக்கிறது. அந்தப் போக்குவரத்துப் பணிமனையை பேருந்து நிலையமாக மாற்றினால், ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பயணிகள் பயன்பெறுவார்கள், ஐயப்ப பக்தர்களும் பயன்பெறுவார்கள், தமிழக மக்களும் பயன்பெறுவார்கள், கேரள மக்களும் பயன்பெறுவார்கள்; அதை சீர்தூக்கிப் பார்த்து, அந்தப் பணிமனையை உள்ளாட்சித் துறையின் மூலம், அதாவது நகராட்சியின் மூலமாக ஒரு பேருந்து நிலையமாக மாற்றினால் நலமாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியானது மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்றாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்துப் பணிமனையை பேருந்து நிலையமாகத் தரம் உயர்த்துவது குறித்துக் கேட்டார்கள். இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அதேபோல, பேருந்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, 'A' கிரேடு, 'B' கிரேடு, 'C' கிரேடு என்று பேருந்து நிலையம்

2016 ஆகஸ்ட் 29]

அமைக்கப்படுகின்றது. அதேபோல, பேருந்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, எந்த கிரேடு பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பது ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம், நமக்கு, என், எனக்கு, தான், தமக்கு என்று தம்மைப் பற்றி, தம்மைச் சுற்றி இருப்பவர்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கிற தலைவர்களுக்கு மத்தியில், 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று மக்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடங்குளம் மற்றும் செட்டிக்குளம் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவது பற்றி கேட்டார்கள். ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பையும் தரம் உயர்த்துவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளுடைய கூட்டங்கள், மன்றக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அந்த மன்றக் கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு, அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரால், அங்கே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அழைத்து முதற்கூட்டம் மற்றும் இரண்டாவது கூட்டம்

நடத்தப்படுகின்றன. அவசியமிருந்தால், மூன்றாவது கூட்டமும் துறையினுடைய இயக்குநரால் நடத்தப்படலாம். ஆக, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அங்கே இருக்கக்கூடிய மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு, அரசின் விதிமுறைக்குட்பட்டு பரிந்துரை செய்யப்பட்டால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, கண்டிப்பாக செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தருமபுரி மாவட்டத்திலே பெண்ணாகரம் மற்றும் மொரப்பூர் ஊராட்சிகளைப் பிரித்து, புதியதாக ஏரியூர் மற்றும் கடத்தூர் ஆகிய இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்க 9-12-2013-ல் ஆணை வெளியிட்டார்கள். அதேபோல கடலூர் மாவட்டத்தில், ஸ்ரீமுஷ்ணம் என்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தைத் தோற்றுவித்திட அரசாணை எண் 97, நாள் 5-8-2014-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வெளியிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அவசியம் ஏற்படின், அதிகாரிகளுடன் ஆய்வு செய்து கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

113—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***3218—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகரில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS